# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 189 ஆங்கீரச வைகாசி 21 (03.06.1992) புதன்


## வலிவடக்கு அகதிகளுக்கு நிவாரண உதவி இல்லை!

வலி வடக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இலவச உலர் உணவு விநியோகிப்பதற்கு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அதிகாரிகள், கிராமசேவையாளர்கள் அக்கறை காட்டவில்லை என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன, அத்துடன் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கோவில்கள், உறவினர்கள் வீடுகளில் தொடர்ந்து தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதைவிட இந்த மக்களுக்கு தொண்டர் ஸ்தாபனங்களும் எதுவித நிவாரண உதவிகளை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

# முகாமினை சிறிது தூரம் விஸ்தரிக்க படையின் பாரிய இழப்பு தேவையா?

## தளபதிகள் சிந்திக்க வேண்டி ஏற்படலாம் என்கிறார் பி. பி. ஸி. செய்தியாளர்

"குடாநாட்டில் பலாலிப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்து விட்டதாக செய்திகள் கடந்த வாரம் வெளியான போது குடாநாட்டை கைப்பற்ற படையினர் நடவடிக்கையை ஆரம்பித்து விட்டனர் என்றே பரவலாக பேசப்பட்டது. ஆனால் இது ஒரு முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கையே என பின்பு தெரியவந்தது" இவ்வாறு குடாநாடு இராணுவ நடவடிக்கை தொடர்பாக பி.பி.ஸியின் தூர கிழக்கு நாடுகள் செய்திப் பிரிவைச் சேர்ந்த லரிஜெகன் எழுதிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொண்டதைப் போன்றே பலாலியிலும் படையினர் தமது முகாமை சிறிது விஸ்தரிக்கும் பேரில் ஈடுபட்டனர்

பலாலி முகாமை 800 மீற்றர் அகலச் செய்ததாக இராணுவம் இப்போது அறிவித்திருக்கிறது.

80 படையினரை பலி கொடுத்தும், 150 படையினரை காயங்களுக்கு உள்ளாக்கியும் கிடைத்த ஒரு குறுகிய நில விரிவாக்கத்திற்கு படையினரின் இந்த இழப்பு பொருந்துமா என்பதை இப்போது இராணுவ நடவடிக்கைகளை பொறுப்பேற்றிருக்கும் முப்படைத் தளபதிகளும் சிந்திக்க வேண்டி ஏற்படலாம் எனவும் அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்

### தெற்கை திருப்திப்படுத்த

இது தவிர தற்போது வடக்கு பகுதி போர் தெற்கு பகுதியை பெரும் தொடர்பாக திருப்திப்படுத்த வேண்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அலம்பிலில் தொடர்ந்தும் உக்கிரமான மோதல்

முள்ளி, அலம்பில் பகுதியில் ஆயிரக்கணக்கான படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நேற்றுத் தொடர்ந்தும் மேற்கொண்டனர்.

இரண்டாவது நாளான நேற்று அப்பகுதிகளில் உக்கிரச்சண்டை இடம்பெற்றபடியிருந்தது.

கடற்கரையோரமாக படையினர் மூன்று பிரிவாக புறப்பட்டுச் செல்ல முயற்சித்த வேளையில் மும்முனைத்தாக்குதலுக்கு மத்தியில் சண்டை இடம்பெற்றுவருகிறதென பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன,

நேற்றும் பொம்மர், அவ்ரோ ஹெலி குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நாள் முழுவதும் மேற்கொண்டபடியிருந்தன. (07

## மணலாறு கரையோரத்தில் மும்முனைத் தாக்குதல்கள்

மணலாறும் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே இடம்பெற்று வரும் உக்கிர மோதல் சம்பவத்தையடுத்து முகாம்களில் உள்ள படையினர் ஷெல் தாக்குதல்களையும், முல்லைக் கடலில் தரித்து நிற்கும் பீரங்கிக் கப்பலிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் ஒயாமல் செம்மலை, அலம்பில், குமுழமுனை குடிமனைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன

கரையோரக் குடிமனைகளை நோக்கி இத்தாக்குதல்கள் இடம்பெற்று வருவதனால் மீனவருக்குச் சொந்தமான 50 க்கு மேற்பட்ட வாடிகள், மீன்பிடி வள்ளங்கள் சேதமடைந்துள்ளன.

அலம்பில் பகுதியில் மீனவ வாடிகள் படையினரால் கொழுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இப்பகுதிகள் பல தடவைகள் பாதிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (07(

## முல்லை கரையோர மக்கள் தாக்குதலால் இடம்பெயர்வு

குமிழமுனை, செம்மலைப் பகுதி கரையோர மக்கள் அலம்பில் இராணுவ நடவடிக்கையையடுத்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, முத்தையன் கட்டுப் பகுதிகளை நோக்கி வந்துகொண்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளுக்குள் கடுமையான ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதனாலே இருக்கமுடியாத நிலையில் பாதுகாப்புக்கருதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்

கடந்த பல தடவையும் இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் திரும்பிச் சென்று குடியமர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. (07)

## ● வயாவிளான்-ஒட்டகபுலம் ஊடாக முன்னேற எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது

வயாவிளான் - ஒட்டகப்புலம் ஊடாக நேற்று முன்தினம் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் நள்ளிரவு மோதல் இடம்பெற்றது.

புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் தமது முயற்சியை கைவிட்டு முகாம் திரும்பினர். (43)

## கடற்படை படகுகள் இரவில் குடாக்கடலில் நடமாட்டம்

யாழ்ப்பாணக் குடாக்கடலில் இரவு நேரங்களில் இறங்கி பீரங்கிப் படகுகளும், கடற்படையினரின் விரைவுப் படகுகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றையதினம் மண்டைதீவுக் கடலில் மூன்று கடற்படைப் படகுகளும், கல்முனையில் மூன்று கடற்படை படகுகளும், பாலைதீவில் மூன்று கடற்படைப் படகுகளும் ரோந்து புரிந்ததாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர். (15)

## ★ வலிகாமம் வடக்கில் நேற்று முழு நாளும் கடும் ஷெல் தாக்குதல்

தெல்லிப்பளை, கொல்லங்கலட்டி, அம்பனை பகுதிகளை நோக்கி நேற்றும் காலை முதல் மாலை வரையில் கடும் ஷெல் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டனர்.

பிற்பகல் வேளையில் ஷெல் தாக்குதல்கள் படுமோசமாக இடம்பெற்றன.

அத்துடன் படையினரின் துப்பாக்கிப் பிரயோகமும் கடுமையாக இடம்பெற்றபடியிருந்தன. (07,47)

## மட்டக்களப்பு கண்ணிவெடி 3 பொலிஸார் பலி

நேற்றுமுன்தினம் நண்பகல் மட்டக்களப்பு பிரதான வீதியில் நடைபெற்ற புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப்பில் சென்ற 3 பொலிஸார் பலியாகினர்.

நண்பகல் 12.15 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து செங்கலடி நோக்கி சென்ற ஜீப் மீதே இத்தாக்குதல் நடைபெற்றது.

இக்கண்ணிவெடித் தாக்குதலில் கப்டன் யசோதரன் (இ. கிருபைபராஜா சரடியனாறு) வீரச்சாவு எய்தினார்.

## அலம்பில் பகுதி மோதலில் பல படையினர் பலியாம்

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் நடைபெறும் கடும் மோதலில் நேற்று முன்தினம் இராணுவத் தரப்பில் பல படையினர் கொல்லப்பட்டதாக இலங்கை வானொலி நேற்று குறிப்பிட்டது.

எனினும் எத்த எண்ணிக்கையில் படையினர் கொல்லப்பட்டனர் என்பதை அவ்வானொலி குறிப்பிடவில்லை

## அரசாங்க அதிபருக்கு ஜீப் யாழ் வர அனுமதி மறுப்பு

யாழ் அரசாங்க அதிபரின் பாவனைக்காக அரசினால் வழங்கப்பட்ட ஜீப் வண்டி தற்போது வவுனியாவிற்கு வந்துள்ளது. ஆனால் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் இதனைக்கொண்டுவருவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

பொதுப்பட்டமளிப்பு
1992 - 09 - 05

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி / கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1992 - 09 - 05 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும் பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 30 - 06 - 92க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முதுதத்துவமாணித் தேர்வு
3. முதுகலைமாணித் தேர்வு
4. முதுவிஞ்ஞானமாணித் தேர்வு
5. கல்விப்பட்டப்படிப்பின் டிப்ளோமாத் தேர்வு 1990
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு 1990
7. வணிகமாணித்தேர்வு 1990
8. தொழில் நிர்வாக மாணித் தேர்வு 1990
9. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1990
10 சிறப்புகலைமாணித் தேர்வு 1990
11. பொதுவிஞ்ஞானமாணித்தேர்வு 1990
12. பொதுக் கலைமாணித் தேர்வு 1990
13 சங்கீதம் / பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1990
14. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித்தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும், மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23 × 10 செ. மீற்றர் அளவுடைய, சுயமுகவரியிட்ட கடித உறையை உப பதிவாளர் / தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக்கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு இடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

06004


# அரசு புத்திசாலித்தனமாகவும் சரியாகவும் நடக்க வேண்டும்

- தொண்டா

"தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படும் போது தோட்டக்காணியில் பத்து சதவீத காணியை தரும்படி கேட்கவில்லை. எந்தக்காணியையும் கேட்கவில்லை. குடியிருப்பு மாடிகளில் (Flats) வசிப்போரது இடவசம் வரும்போது அரசு தனது கொள்கையைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்றே கேட்கின்றோம். தோட்டங்களில் நிலவும் சமூக அம்சங்களை தனியார் மயப்படுத்தல் கூடாது. தனியார் மயமாக்குதல் வர்த்தகம் சம்பந்தப்பட்டதோடு நிற்கட்டும். இப்படிச் செய்வதனால் தமிழர்களுக்கு ஒரு தாயகம் அமைந்து விடும் என சிங்கள மக்கள் எண்ணக் கூடாது".

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எல்லோரும் எதிர்த்தனர். அந்த மடமைத்தனமான அணுகுமுறையினால் நாடு இன்றுள்ள பரிதாப நிலைக்குள்ளாகியுள்ளது. அன்று பண்டா-செல்வா ஒப்பந்தத்தை செயற்படுத்தியிருப்பின் தற்போதைய நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கும். ஆகவே நாட்டின் நலனைக் கருத்திற் கொள்வோர்களும் அரசியல் தலைவர்களும் கடமையைக் கருத்திலெடுக்காது புத்திசாலித்தனமாகவும், சரியாகவும் செயற்பட வேண்டும்" எனக் கூறினார்.

## தென்னாபிரிக்க மொழியாக தமிழுக்கும் பரிந்துரை

தென்னாபிரிக்காவில் உள்நாட்டு மொழிகளுடன் சேர்த்து நான்கு இந்திய மொழிகளுக்கும் முழு அளவிலான அங்கீகாரம் அளிக்குமாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பரிந்துரைத்துள்ளது.

இந்த நான்கு இந்திய மொழிகளுள் தமிழும் ஒன்றாகும்.

ஹிந்தி, குஜராத்தி, உருது என்பனவே ஏனைய மூன்று மொழிகளுமாகும்.

## மாவட்டம் தோறும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி

மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சியை நடாத்த இந்து சமய கலாசார அமைச்சு ஏற்பாடு செய்து வருகிறது.

இப் புத்தகக் கண்காட்சியில் தமிழ் நாட்டு நூல்களும் இலங்கைத் தமிழ் நூல்களும் இடம்பெறும்.

அங்கு புத்தக விற்பனையும் இடம்பெறும்.

## அகதிப் படகில் ஹிரோயின் கடத்திய இரு முஸ்லிம்கள் கைது

கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு பெருமளவு ஹிரோயின் போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு நடத்தப்படும் அகதிகளுக்கான படகுச் சேவையில் இப் போதைப் பொருளை கடத்த முற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தோட்ட முகாமைத்துவ மாற்றம் அடுத்தவாரம்

சர்ச்சைக்குரியதாக விருந்த தோட்ட முகாமைத்துவம் அடுத்த வாரம் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்படும். இலாபப் பங்கீடு பற்றிய முடிவு அரசுக்கும் கம்பனிகளுக்குமிடையே மூன்று மாத பேச்சு வார்த்தைகளுக்குப் பின்பு எடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு.

22 தோட்டக் குழுக்களும் அரசுக்கு சொந்தமான பிரதேச முகாமைத்துவ நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்படும். பின்னர் அந்த நிறுவனங்கள் தோட்ட முகாமைத்துவத்தை தெரிவு செய்யப்பட்ட தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும்.

## பிணை மனு நிராகரிப்பு

தமது கணவரைக் கொல்வதற்கு ஓர் கொலையாளியைக் கூலிக்கு அமர்த்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட திருமதி பிஸோ ரஞ்சன் சமர சிங்க தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சமர்ப்பித்த மனுவை லண்டனில் உள்ள நீதிபதி ஒருவர் நிராகரித்துள்ளார்.

இவர் ஜூன் மாதம் நான்காம் திகதி மீண்டும் ஆஜராகும் படி பணித்து காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

விமானவியல் பொறியியலாளர் சமர சிங்கவின் மனைவியான இவர் முழுச் சம்பளத்துடன் அவரது வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டனில் குடியேறி வாழும் சிறிலங்கா சிங்களக் குடும்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## விமானச் சீட்டுக்கு கடன் வசதி

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்காகச் செல்பவர்களுக்கு உதவி செய்வதற்கென சிறிலங்கா ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஓர் வங்கி உத்தரவாதத் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகை விமானப் பயணச் சீட்டுக்கும் ஏனைய செலவுக்குமாக குறைந்த வட்டியில் வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் இக் கூட்டுத் தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமே விமானப் பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இக் கூட்டுத்தாபனம் உரிய உத்தரவாதத்தை வங்கிக்கு வழங்கும். இவ்வாறு பெறப்படும் கடன் 12 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.


சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 21 H P லிஸ்டர் எஞ்ஜினுடன் கிறைண்டிங் மில் செற் விற்பனைக்குண்டு
மே/பா முருகன் மில்
கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்

06002


## அம்புலன்ஸ் சேவை மாற்றம்

தெல்லிப்பழைப் பகுதியில் இருந்து பொதுமக்களுக்கு சேவையாற்றி வந்த அம்புலன்ஸ் வாகனம் நேற்று முன்தினம் முதல் மானிப்பாய்க்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

மல்லாகத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமானதால் அம்புலன்ஸ் வாகனத்திற்கும் சாரதிகளுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் இம் மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21,07)

## மகாநாட்டின் கருப்பொருள்

உலகத்திருக்குறள் மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் 7, 8, 9, ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டின் ஆய்வுக் கருப்பொருள் "உலக மக்கள் ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்கு அறிவியல் அடிப்படையில் தமிழ் மறை காட்டும் வழி" என்பதாகும். திருக்குறள், திருவள்ளுவர் தொடர்பான ஆய்வரங்குகள் என்பனவும் அங்கு நிகழும்.

## அந்நியரிடம் அடகு வைத்து துரோகமிழைக்கிறது அரசு

- தினேஷ் குணவர்த்தன

"இந்நாட்டுக்குச் சொந்தமான 450 தோட்டங்களை 22 அந்நிய கம்பனிகளுக்கு வழங்கப்போகிறது இந்த அரசு. மக்கள் மயம் என்கிற போர்வையின் கீழ் மீண்டும் எமது நாட்டிலுள்ள பெரும்பாலான காணிகளை அந்நியரிடம் அடகு வைக்கப்போகிறது அரசு. இது இந்நாட்டிற்கும் மக்களுக்கும் செய்யும் பெரும் துரோகமாகும்" இவ்வாறு கொழும்பு மாவட்ட எம்.பி.யும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன இரத்தினபுரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

## பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு விண்வெளி வீரர்களின் கவசஉடை

இங்கிலாந்தில் உள்ள ஹெச்சிங்கி இரசாயனத் தொழிற்சாலையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இரசாயனத் தொழிற்சாலையில் உருவாகும் திடீர் விபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்காக விண்வெளிக்குச் செல்வோர்கள் பயன்படுத்துவது போன்ற கவச உடைகள் நிர்வாகத்தினால் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (15)

## தபாலகமும் சேதம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த தெல்லிப்பழை தபாலகம் குண்டு வீச்சினால் பலத்தசேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கோவில் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சினால் தபாலகத்தின் பிரதான தபாலதிபர் தாக்கி விசப்பட்டுள்ளதாக மேற்படி தபாலக ஊழியர் ஒருவர் தெரிவித்தார். 47

## ஈச்சமோட்டை அணி வெற்றி பெற்றது

கொழும்புத்துறை ஜெகலன்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும், 12 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஏழு வீரர்கள் மாத்திரம் பங்கு பற்றும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக "பி" பிரிவு அணியை 42 ஓட்டங்களால் தோற்கடித்தது: 16


இதய பூர்வ நன்றிகள்

மில்க்வைற் நிறுவனமும், ஐக்கிய நாடுகள் சங்கம் யாழ். கிளையும், தங்கள் அழைப்பை ஏற்றுப் பூமியின் பாதுகாப்பில் அக்கறை காட்டி "பூமியைப்பேணுவதற்கான திடசங்கற்பத்"தில பங்கேற்ற அனைவர்க்கும் தங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

இப்புனித கைங்கரியத்தில் கலந்து கொள்ளத் தவறியவர்கள், நேரில் தொடர்பு கொண்டு மில்க்வைற் நிறுவனத்தில் திடசங்கற்பம் ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள்.

06005

## கொழும்பில் சத்திரசிகிச்சை இன்றி சிறுநீரக கற்கள் அகற்றப்படுகிறது

சத்திரசிகிச்சை இன்றியே சிறுநீரகத்திலுள்ள கற்களை அகற்றும் இயந்திரமொன்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பொருத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள இந்த ஒரேயொரு சிறுநீரக கற்களை அகற்றும் இயந்திரத்தை தருவித்து பொருத்தியமைக்கு சுகாதார அமைச்சு 5 கோடி ரூபா வினைச் செலவிட்டுள்ளது.

சிறுநீரகத்திலுள்ள கற்கள் இந்த இயந்திரத்தின் மூலம் உடைக்கப்பட்டு சத்திரசிகிச்சை இன்றியே அகற்றப்படுகின்றன.

## அரிசி ஆலை தராசுகளுக்கு முத்திரையிடப் பணிப்பு

சகல அரிசி ஆலைகளிலுமுள்ள மேடைத் தராசு, வில் தராசு, துலாத் தராசு உட்பட சகல நிறுவைக் கருவிகளும் சீல் வைக்கப்பட வேண்டுமென்று யாழ் மாவட்ட அளவைகள், நிறுவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரிசி ஆலைகளில் நிறை குறைவான தராசு படிகள் பயன்படுத்தப்படுவதாகவும், நிறை குறைத்து அரிசி விற்பனை செய்யப்படுவதாகவும் புகார்கள் கிடைத்து வருவதை அடுத்தே அரிசி ஆலைகளின் அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்குத் தவறாது முத்திரையிடுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே அளவைகள் நிறுவைகள் திணைக்களத்தினால் முத்திரையிடப்படாத பகுதிகளில் முத்திரையிடாதிருந்த அரிசி ஆலை உரிமையாளர்கள் யாழ் செயலகத்தில் புதன் கிழமைகள் தோறும் காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 வரை தமது அளவை, நிறுவைக் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளலாமென்று யாழ். மாவட்ட அளவைகள் நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (14)

## மட்டக்களப்பில் அறநெறி பாடசாலைகள் மூடப்படலாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் 28 இந்து அறநெறிப் பாடசாலைகளையும் மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்து கலாசார ராஜாங்க அமைச்சினால் இப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த நன்கொடைப் பணம் கடந்த 3 வருடங்களாக வழங்கப்படாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு பாரபட்சம் காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## நீர்கொழும்பு பகுதியில் மேலும் 13 தமிழர்கள் கைது!

நீர்கொழும்பு, வத்தளைப் பகுதியில் மேலும் 13 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களுடன் மொத்தம் 41 தமிழர்கள் இப்பகுதிகளில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதிகளில் சந்தேகமான தமிழர்களைக் கைது செய்யும் பணியில் விசேட பொலிஸ் பிரிவொன்று ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி ஆராய்ச்சிப் பிரிவு

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவொன்றை உருவாக்கும் முயற்சியில் அங்குள்ள தமிழர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பொருட்டு நான்கு இலட்சம் டொலர் நிதி திரட்ட அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் முடிவு செய்துள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கடந்த 25 வருட காலமாக தமிழ் மொழி விரிவுரைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சீர்குலைக்கும் எந்த முயற்சியிலும் புலிகள் ஈடுபடவில்லை

**- கேணல் சரத் முனசிங்க**

வவுனியாவில் வார இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவையை சீர்குலைக்கக் கூடிய எந்தவிதமான ஒரு முயற்சியிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் ஈடுபடவில்லையென கூட்டுப் படைத்தலைமையக பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

## புதுப்பிக்கப்பட்ட அட்டைகளை நல்லூர் பிரிவினர் பெறலாம்

1972/73 ஆம் ஆண்டுகளில விநியோகம் செய்யப்பட்ட அடையாள அட்டைகளுக்கான புதிய அடையாள அட்டைகளைப் பெற விண்ணப்பித்த நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தோருக்கான அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

சுமார் 35 அடையாள அட்டைகள் இப்பணிமனையின் மூலம் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

இவ்வடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வோர், தங்களிடமுள்ள பழைய அட்டைகளை ஒப்படைத்தே பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், ஒப்படைக்கத் தவறுவோருக்கு இவை வழங்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 25

## உள்ளூராட்சி ஊழியர்களை மாகாண சேவையில் இணைக்க அங்கீகாரம்!

மாகாண அரச ஊழியர்களுக்கான இணைப்பு நடைமுறைத் திட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண அரச ஊழியர்களும் மாகாண செயலக ஊழியர்களும் அரச ஊழியர்களாகக் கருதப்பட்டு ஓய்வூதியத் திட்டத்தில் உரிய மாற்றங்கள் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சேவை முறை முடிவுறுத்தப்பட்டு அச்சேவையில் உள்ள சகல மட்ட ஊழியர்களும் மாகாண சேவையில் உள்ளடக்கப்பட வேண்டும் எனச் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசுகளையும் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இந்த ஊழியர்கள் உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றிய காலப்பகுதி ஓய்வூதியம் பெறுவதற்கான சேவைக் காலமாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

## விவாகப் பதிவாளராக நியமனம்

யாழ். பிரிவு பொது விவாகப்பதிவாளராக பி. எஸ். திருச்செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூக சேவை அதிகாரியாகவும் மாவட்ட நீதிமன்ற குடும்ப ஆலோசகராகவும் சேவையாற்றிய இவர் நீதிமன்ற ஆணை பெற்ற மொழி பெயர்ப்பாளராகவும் வட மாநில ஓய்வூதியர் சம்மேளனத்தின் செயலாளராகவும் தற்போது பணியாற்றி வருகிறார்.

இவரது விவாகப்பதிவு அலுவலகம் தொடர்ந்தும் நாவலர் வீதியிலேயே செயற்படும்.

## பாஷையூர் உற்சவம்

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் உற்சவம் முடிவடையும். (14

## ஜொனியன்ஸ் வெற்றி பெற்றது

ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம் ஷப்ரா நிதாபனத்தின் அனுசரணையுடன் நடத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பொழுது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய 'ஷப்றா' விளையாட்டுக்கழக அணியை 7 இலக்குகளால் வெகு இலகுவாகத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஷப்றா அணி 11.4 பந்து மாற்றங்களில் தங்களது சகல இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 3 இலக்குகளைப் பறிகொடுத்து 11.2 பந்து மாற்றங்களில் வெற்றி இலக்கான 34 ஓட்டங்களைப் பெற்று சாம்பியன் ஆனது. (16)

## 6 தமிழர்கள் விடுதலை

வவுனியாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 6 தமிழ் இளைஞர்கள் விசாரணையில் நிரபராதிகளாகக் காணப்பட்டதையடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## கொள்ளை

வார இறுதியில் யப்பானின் தென்பகுதியில் கடைத்தொகுதி யொன்றில் 100 கோடி யென் (78 லட்சம் டொலர்) பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வளைகுடா நஷ்டஈடு வழங்கலை துரிதப்படுத்த கோருகிறார் பிரதமர்

வளைகுடா யுத்தத்தை அடுத்து குவைத்திலிருந்து நாடு திரும்பிய தொழிலாளர்களுக்கான நஷ்டஈடு வழங்கலைத் துரிதப்படுத்துமாறு இலங்கை கோரவுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் வருடாந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனிவாவுக்குச் செல்லவுள்ள பிரதமர் ஜெனிவாவில் தங்கியிருக்கும் வேளை ஐ.நா. நஷ்டஈட்டுக் கமிட்டியின் நிர்வாகச் செயலாளரைச் சந்தித்து இக் கோரிக்கையை விடுப்பார்.

## நாடு திரும்பிய 747 குடும்பங்கள் வவுனியாவில் குடியமர்வு

வவுனியாவில் 56500 குடும்பங்கள் சமீபகாலத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அரச தகவலொன்று தெரிவிக்கின்றது.

23301 பேர் இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் இவர்களைத் தவிர இந்தியாவிலிருந்து நாடுதிரும்பிய 8058 குடும்பங்களில் 747 குடும்பங்கள் வவுனியாவில் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்கென 29 கோடி 50 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி ஏற்கத் தவறிய பட்டதாரிகளுககு மீண்டும வேலை!

கடந்த 1990 ஏப்ரல் மாதத்தில் ஆசிரியர்களாக நியமனம் பெற்று பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தமையினால் மீண்டும் வேலை வழங்கப்படாதிருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு உடனடியாக மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கனடாவில் வெள்ளையர் சுட்டு தமிழ் இளைஞர் படுகாயம்!

கனடா ரொறன்ரோவில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் வெள்ளையர்களின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அதிகாலை வேளை ரமணன் இராமச்சந்திரன் என்ற இந்த இளைஞரின் பணத்தைக் கொள்ளையிட இரு வெள்ளையர்கள் காரொன்றுக்குள் ரமணனை ஏற்றிச் சென்று ரொறன்ரோ மிருகக்காட்சிச் சாலைக்கு அருகிலுள்ள பூங்காவில் வைத்து இவர் மீது சுட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இவர் இறந்து விட்டதாகக் கருதிய வெள்ளையர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றதும் ரமணன் ஒரு மைல் தூரம் நடந்து சென்று அம்புலன்ஸ் ஒன்றின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அலம்பில் பகுதியில் கடுமோதல்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் அலம்பில் பகுதிக்கு அண்மையில் உக்கிரமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை முன்னேற விடாது கடுமையாகத் தாக்கி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பெண்ணின் தலைமையிலான கொள்ளைக் கோஷ்டி கைது!

நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் தலைமையிலான கொள்ளைக் கோஷ்டியொன்று சிலாபம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளது.

நான்கு பேரைக் கொண்ட இக் கொள்ளைக் கோஷ்டியிடமிருந்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான கொள்ளைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

## நான்கு இந்திய மீனவர்கள் பேசாலையில் கரை ஒதுங்கினர்

மன்னார் பேசாலை கடற்கரையில் நான்கு இந்திய மீனவர்கள் கரைஒதுங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

படகின் இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த வியாழக்கிழமை இவர்கள் பேசாலை கரையைவந்தடைந்தனர்.

## இலட்சார்ச்சனை

மந்திகை கண்ணகை அம்மன் கோவிலில் இம்மாதம் 14 ஆம் திகதி ஏகதின இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது. (10)

## தி. மு. க. தலைவராக கருணாநிதி மீண்டும் தெரிவு

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக ஆறாவது தடவையாகவும் மு. கருணாநிதி ஏகமனதாக தெரிவானார். கட்சித்தலைவர் வேட்புமனுவை கருணாநிதி மட்டுமே தாக்கல் செய்திருந்தார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற கட்சியின் பொதுக் குழு கூட்டத்தில் நடைபெற்ற இத்தெரிவில் கட்சியின் பொதுச் செயலராக க. அன்பழகன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை அகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பக்கூடாது, இலங்கையில் சுமுக நிலை ஏற்படும் வரை அகதிகளை தமிழக அரசே பராமரிக்கவேண்டும். தடா சட்டம் தவறாக தமிழக அரசினால் கையாளப்படுகிறது. இச்சட்டத்தை தமிழக அரசு வாபஸ்பெறவேண்டும் ஆகிய தீர்மானங்களும் நேற்று தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

★ அதிபர்கள் நேரில் வந்து பெறவும்

## பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகள் வந்தன

கீழே குறிப்பிடப்படும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய அடையாள அட்டைகளே செயலக ஆட்பதிவுத்திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன.

புனித பத்திரிசியார் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், கோப்பாய் அத்தியார் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சேப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, வசாவிளான் மமவித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், கோப்பாய் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், சண்டிக்குளி மகளிர் கல்லூரி, கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம், வைத்தீஸ்வரா வித்தியாலயம், அராலி இந்துக்கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம், நல்லூர் ஞான பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி, நயினாதீவு ஸ்ரீ கணேசன் மகாவித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

இப்பாடசாலைகளின் அதிபர்கள் நேரில் வந்து இவ் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அதிபர்கள் வரத்தவறும் சந்தர்ப்பத்தில், அதிபரால் குறித்துரைக்கப்படும் ஒருவர் அதிபரின் கடிதத்தைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளலாமென்றும் செயலக ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (25)

## பயிலுநர் ஆசிரிய நியமனம் எதிர்காலத்தில் இல்லை

எதிர்காலத்தில் பயிலுநர் என்ற ரீதியில் ஆசிரியர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வுக்குழு ஏற்றுள்ளது

சகல ஆசிரியர் சங்கங்களும் இணைந்து கடந்த 28 ஆம் திகதி கல்வியமைச்சில் நடைபெற்ற ஆசிரியர் சம்பளம் பற்றிய கலந்துரையாடலின் போது விடுத்துள்ள இவ் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள இவ்வாண்டு நியமிக்கப்படவுள்ள பயிலுநர் ஆசிரியர்களும், பட்டதாரி பயிலுநர்கள் தொழில்கள் பயிற்சி அளிக்கப்பட்டு ஆசிரிய சேவை 3, 4 என நியமிக்கப்படவுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## உலக சூழல் உச்சி மாநாடு பிறேசிலில் இன்று ஆரம்பம்

பூமியின் சுற்றுப்புற சூழல் பராமரிப்பு தொடர்பான உலக உச்சி மாநாடு இன்று பிறேசில் தலைநகர் ரியோடி ஜெனீரோவில் ஆரம்பமாகிறது.

ஐ. நா. தலைமையில் முதற் தடவையாக கூட்டப்படும் இத்தகைய முதல் உச்சி மாநாட்டில் உலகில் உள்ள பெரும்பாலான 185 நாடுகளின் முப்பதாயிரம் பிரதிநிதிகள் பங்கு பற்றுகின்றனர்.

12 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பூமிவாழ் உயிரினங்களை காப்பது குறித்த வழிவகைகள் ஆராயப்படும்

● முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.

## நாம் கேட்டுக்கொண்ட போது இந்தியா தடை செய்திருக்கலாம்

"புலிகள் அமைப்பை நாம் கேட்டுக் கொண்ட போது இந்தியா தடை செய்திருந்தால் ராஜீவின் கொலையை இந்தியா தடுத்திருக்கலாம்" என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

ராஜீவ் கொலைக்கு புலிகளை குற்றஞ் சாட்டும் முதல் இலங்கை அரசியல்வாதி ஜெயவர்த்தனாவே என்றும் இலங்கையின் ஏனைய அரசியல் வாதிகள் இப்படியான குற்றச்சாட்டை இதுவரை பகிரங்கமாக கூறவில்லை என்றும் ஜெயவர்த்தனாவின் இக்கூற்று தொடர்பாக கருத்து வெளியிட்ட ஏ. எப். பி செய்தியாளர் குறிப்பிடுகிறார்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 03-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது தாக்கு

# யாழ் மறைவட்ட குருக்கள் ஒன்றியம் ஜனாதிபதிக்கு ஆட்சேப கடிதம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலினால் ஒரு சமய அமைப்பு என்ற வகையில் நாம் பெரிதும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைகிறோம்

இவ்வாறு யாழ், மறைவட்ட குருக்கள் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது

தயவுசெய்து வழிபாட்டு இடங்களில் கூடும் பக்தர்கள், அகதிகள் மீது தாக்குதல் நடத்துவதை தவிருங்கள் என்ற தலைப்பில் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

வவுனியாவில் நீங்கள் சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த அதேவேளை உங்கள் படையினர் ஆலயம் மீதான தாக்குதலை நடத்தியது வருந்தத்தக்க செயலாகும்.

துர்க்கை அம்மன் ஆலயச் சம்பவத்தால் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளதுடன், புனித விக்கிரகங்கள் அழியுண்டு ஆலயமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் கவலையுடன் அறியத்தருகிறோம்.

சுமார் இருவாரங்களுக்கு முன்பு வரலாற்றுப் பெருமை வாய்ந்த வற்றாப்பளை ஆலயத் திருவிழாவின் போது படையினர் மேற்கொண்ட பயங்கரமான இரத்தத்தை உறைய வைக்கும் தாக்குதலையும் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

கூடியிருந்த பக்தர்கள் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களால் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர், குழந்தைகள் உட்படப் பலர் பலியானார்.

இச்சம்பவத்தை விசாரிக்க ஒரு குழுவையும் தாங்கள் நியமித்தது குறித்து நாம் மகிழ்கிறோம்.

இராணுவ நடவடிக்கைகளின் போது ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் மக்களைச் சரணடையுமாறு அரசு அறிவுறுத்துகிறது.

ஆனால் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின் போது பாடசாலைகளோ ஆலயங்களோ அகதிமுகாம்களோ ஆஸ்பத்திரிகளோ கூட விட்டுவைக்கப்படவில்லை என்பதை கவலையுடன் குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே மக்கள் உயிரைக் காத்துக்கொள்ள பாதுகாப்புத் தேடிச்செல்லும் போது இவ்விடங்களையாவது தாக்குதலின்றி தவிர்க்குமாறு வேண்டுகொள்கிறோம். எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கே அம்புலன்ஸ்

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச அரசினர் வைத்தியசாலைகளுக்கு மட்டுமே அம்புலன்ஸ் வண்டியை எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதித்துள்ளது

யாழ் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டிக்கு பற்றாக்குறை ஏற்பட்டதை வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சிடம் சுட்டிக்காட்டியது.

இதனையடுத்து யாழ், வைத்தியசாலைக்கு இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளை கம்பளில் எடுத்துச் செல்வதற்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்தது.

ஆனால் தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில்லாத எந்த ஒரு பிரதேசங்களுக்கும் அம்புலன்ஸ் வண்டிகளை எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் தடை விதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## கடற்படை தாக்கு

மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் தரித்து நின்ற கடற்படை படகில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு 11-00 மணியளவில் யாழ் கரையோர பகுதியை நோக்கி பீரங்கி தாக்குதலை மேற்கொண்டனர் 47

## ஜீவனாம்ச வழக்கு

பாராளுமன்ற உப சபாநாயகர் காமினி பொன்சேகா மீது அவரது முன்னாள் மனைவி அஞ்சலா செனிவிரட்ன ஜீவனாம்ச வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

## விடுவிக்கப்பட்டார்

கொல்லன்கலட்டிக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையில் உள்ள செந்தாவத்தையில் படையினரிடம் சிக்கிய இரத்தினம் (65) என்ற வயோதிபர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இவர் பார்வையிழந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது (22)

முகாமினை ...

டிய நிர்ப்பந்தத்தில் எழுந்திருக்கலாம்

கடந்த சில வாரங்களாக போர் செலவை ஈடுசெய்ய அரசு விற்பனைவரி, பாதுகாப்புவரி என வரிகளை கூட்டி அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளையும் அதிகரித்துவிட்டது. இது தெற்கு மக்களை பெரும் எரிச்சலை வரச் செய்திருக்கலாம் இந்நிலையில் ஒரு தீவிர போர் நடப்பதைக் காட்டிக் கொள்ள அரசு விரும்புகிறது என லசிஜெகான் தனது செய்தியில் சுட்டிக் காட்டுகிறார்.

## பத்திரிகைகள் இரட்டைத் தராதரத்தை கடைப்பிடிக்கின்றன — சோ

''பத்திரிகைகள் பொதுவாக இரட்டை தராதரத்தையே பிரயோகிக்கின்றன'' என ''சோ'' இராமசாமி சென்னை ஆங்கில சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது

கருணாநிதி பற்றி மதிப்பிடும் போது ஜெயலலிதாவை மதிப்பிடுவது போல கடுமையாக இருப்பதில்லை ஜெயலலிதா அதிகம் கண்டிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி அதிகம் தூஷிக்கப்பட்டும் உள்ளார்.

தி மு க- விடமும் கருணாநிதியிடமும் பத்திரிகைகள் மென்மையாகவே நடந்து கொண்டுள்ளன.

ஆனால் மக்கள் எப்பொழுதும் ஜெயலலிதாவிடம் குருட்டுத்தனமாக மென்மையாகவும் கருணாநிதி மீது கடுமையாகவும் இருந்துள்ளனர் இது தான் தமிழக அரசியல் தோற்றம்.

அண்மையில் சுமத்தப்பட்டதுபோல இப்போது தாம் ஆட்சேபிக்கும் வகையான பல அறிக்கைகளை ஜெயலலிதாவே முன்பு வெளியிட்டுள்ளார். மற்றவர்களைப் பற்றி இப்படியான குற்றச்சாட்டுகளை அவரே முன்பு கூறியுள்ளார்.

இவ்வாறு தமிழக அரச-பத்திரிகைகள் மோதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ''சோ'' தெரிவித்துள்ளார் இலஸ்ரேட்டட் வீக்லி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையில் ஒரு வார்த்தைகூட உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உட்படாது என கூறியுள்ளார் ''சோ'' நீதிமன்றங்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

## வீடுபார்க்கச் சென்றவர் மீது படையினர் சுட்டனர்

நேற்று மாலை தெல்லிப்பழைக்கும் கொல்லங்கலட்டிக்குமிடையிலுள்ள கிராமக்கோட்டை என்னுமிடத்திற்கு வீடு பார்க்கச் சென்ற முருகையா (ஆட்டுக்கார முருகையா) என்பவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

இவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 22

## புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பம்

1992 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர்கள் தங்கள் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து உடனடியாகப் பெற்றுப் பூரணப்படுத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் காலதாமதமின்றிச் சமர்ப்பிக்கும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்: 47

## மகாபொல கொடுப்பனவு

யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான 5ஆம், 6ஆம் தவணைகளுக்குரிய மகாபொல கொடுப்பனவுகளே வழங்கப்பட்டு வருகின்றன 18